2011 செப்டம்பர் 12]

4. விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட அறிக்கைகளின் நகல்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது படித்த அறிக்கை விதி 110—ன்கீழ் படிக்கக்கூடிய அறிக்கைளை அவையில் படித்த பிறகு அதன் நகலினை, அவையில் வைக்கப்படும் ஏடுகளோடு சேர்த்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் பத்திரிகை மூலமாகத்தான் நாங்கள் அவற்றைப் படிக்க வேண்டியிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்தக் கூட்டத் தொடரில் விதி 110—ன்கீழ் என்னால் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளும், இனிமேல் வழங்கப்படவுள்ள அறிக்கைகளும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடு)* Please sit down Mr. Arumugam. *இப்போது* time already 10-52, Agenda *படி நான் போக வேண்டும். இன்னும்* Ministers reply *இருக்கிறது;* Demand move *பண்ண வேண்டும். இவ்வளவு இருக்கிறது.* Please sit down. *இன்னொரு நாள் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு)*